OS. 87/2021

நாள். 24.03.2026

வா.சா. 1 – முருகேசன்

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

நானும், 3, 4 பிரதிவாதிகள் சேர்ந்து 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியின் மகள் தீபாவை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 9ம் பிரதிவாதி கூரிக்கிழவனின் மனைவிதான் சுசிலா என்றால் சரிதான். சுசிலா என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் என் சகோதரி சுசிலாவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் சகோதரி சுசிலாவை சிறுவயதிலேயே வன்னியன் மற்றும் பூவாயி என்பவர்களுக்கு தத்து கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். வன்னியன் மற்றும் பூவாயி தம்பதியினர்தான் என் சகோதரி சுசிலாவை படிக்கவைத்து, திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். வன்னியன் மற்றும் பூவாயி சொத்துக்களை என் சகோதரி சுசிலாதான் வாரிசு அடிப்படையில் அடைந்து கொண்டார் என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ட 9 பிரதிவாதி சுசிலாவின் கணவர் என்றும், 10 முதல் 13 பிரதிவாதிகள் மக்கள் என்றும், அவர்கள் சுசிலாவின் வாரிசுகள் என்றால் சரிதான். சுசிலா உயிரோடு இருந்த காலத்தில் என் தாய்தந்தை சொத்துக்களில் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். என் சகோதரி சுசிலாவை சிறுவயதிலேயே தத்துகொடுத்துவிட்டதால் அவருக்கு என் தாய்தந்தை சொத்துக்களில் எவ்வித பங்குபாத்திய உரிமை இல்லை என்றால் சரிதான். நான் 11 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி 1ம் இலக்க சொத்தில் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்தின் விஸ்தீரணம் 22 சென்டு. நானும் 1ம் இலக்க சொத்தில் கிழக்கு பகுதியில் வீடுகட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான் அந்த வீடு அமைந்துள்ள இடத்தை என் தகப்பனார் எனக்கு இனாமாக

எழுதிக்கொடுத்தார். 2ம் பிரதிவாதியும் 1ம் இலக்க சொத்தில் வீடுகட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியும் 1ம் இலக்க சொத்தில் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் 1ம் இலக்க சொத்தில் கடந்த 20 வருடங்களாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் 20 வருடங்கள் இல்லை, வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான். அவர்கள் 20 வருடங்களாக வீடுகட்டி வசித்து வருகிறார்கள் என்றும், நான் வழக்கிற்காக வழக்கு தாக்கல செய்வதற்கு முன்புதான் வீடுகட்டி குடியிருந்து வருவதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து என் தகப்பனார் உயிரோடு இருந்த காலத்திலேயே வாய்மொழியாக பாகம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட இடத்தில்தான் வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா 1ம் இலக்க சொத்தில் வீடுகள் கட்டும்போது நான் எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால், கூட்டு அனுபவத்தில் இருந்ததால் செய்யவில்லை. தாவா சொத்துக்களைபொறுத்து என் தந்தை உயிரோடு இருந்த காலத்திலேயே வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல, வழக்கிற்காக தாவா சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை என்றும், கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்கப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.